**உரிய நேரத்திலான, வெளிப்படைத்தன்மை மிக்க, அறிவியல்பூர்வமான, சான்றுகளின் அடிப்படையில், பெற்றுக்கொள்ளக் கூடிய நிர்ப்பீடனத் திட்டத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பின் கோரிக்கை**

கீழே ஒப்பமிட்டுள்ள நாங்கள் இலங்கைப் பிரசைகள் என்ற ரீதியிலும் சிவில் சமூகக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் என்ற ரீதியிலும் இலங்கையில் தடுப்பூசியேற்றல் நடவடிக்கைகள் தொடர்பாக எமது தீர்க்கமான கரிசணைகளை வெளிப்படுத்துகின்றோம். தடுப்பூசியேற்றல் நிகழ்ச்சித்திட்டத்தில் பாரிய வெளிப்படைத்தன்மைக்காகவும் அறிவியல் அணுகுமுறைக்காகவும் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்த வருட ஆரம்பத்தில் இருந்து தடுப்பூசியேற்றல் நிகழ்ச்சித்திட்டம் என்பது பெருந்தொற்றுக்கான அரசாங்கத்தின் மந்திரத் தீர்வாக இருந்து வருகின்றது. இவ்வாறான காலக்கெடுவினுள் மக்கள் தொகையின் இவ்வளவு சதவிகிதமானவர்களுக்குத் தடுப்பூசியேற்றப்படும் என மீண்டும் மீண்டும் பல்வேறு அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் வாக்குறுதியளித்தனர். ஒவ்வொரு மாதமும் அடுத்த தொகுதித் தடுப்பூசிகள் வரவுள்ள புதிய காலக்கெடு மக்களுக்குக் கூறப்பட்டது. ஆனால் இந்தக் காலக்கெடுக்கள் பின்னகர்த்தப்பட்டு வந்தன. தடுப்பூசிகளின் கொள்வனவுச் செயன்முறை என்பது சிரமமானது என்பதில் சந்தேகம் இல்லை. உலகம் முழுவதிலும் தடுப்பூசிகளுக்கான கிராக்கி நிலவிவருகின்றது. விநியோகத்தர்களும் கிராக்கியினைப் பூர்த்திசெய்யப் போராடிவருகின்றனர். இருப்பினும், எமது பிராந்திய அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இற்றைவரை இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றியவர்களின் மொத்த எண்ணிக்கையில் இலங்கை பின்னடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இதேவேளை, பெற்றுக்கொண்ட சொற்பமான தடுப்பூசிகளின் விநியோகமும் ஆரம்பத்தில் இருந்து சர்ச்சைகள் நிறைந்ததாகவே இருந்து வருகின்றது.

விநியோகமானது, சில அறிவியல் ரீதியான முன்னுரிமையினைப் பின்பற்றப்போவதாக ஆரம்பத்தில் அறிகுறிகள் தென்பட்ட போதிலும், பெப்ரவரி நடுப்பகுதியில் அரசாங்கம் இந்தக் கொள்கையினைக் கைவிட்டு இரண்டாவது தடுப்பூசியினைப் பெற்றுக்கொள்ள முன்பு நினைத்ததை விட அதிக காலம் செல்கின்றது என்பதை உறுதிப்படுத்தி உடனடியாகவே பொதுமக்களுக்குத் தடுப்பூசியேற்றும் நடவடிக்கைகளை விரிவுபடுத்தியது.

இதில் இருந்து, தடுப்பூசிகளை எங்கே பெறமுடியும் மற்றும் எப்போது பெறமுடியும் என்பது பற்றிய தகவல்கள் மக்களுக்குச் சமமற்ற முறையில் கிடைத்ததால் குழப்பமான சூழ்நிலையே நிலவி வருகின்றது. தவறான தகவல்களையும் போலியான தகவல்களையும் பரப்புவதாகச் சமூக ஊடகங்களை அதிகாரிகள் குறைகூறினாலும் பிரதேசத்தில் எப்போது தடுப்பூசி கிடைக்கும் என்பது பற்றிய தகவல்களைப் பெற மக்கள் பேஸ்புக் மற்றும் வட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்களைச் சார்ந்திருக்கும் நிலையே காணப்பட்டது. ஏனையோர் தமது பிரதேசத்தில் ஒலிபெருக்கி வழியே அவசரமாகப் பரப்பப்பட்ட செய்திகளின் அலறல் தாங்க முடியாது காதைப் பொத்த வேண்டிய நிலைக்கு ஆளானார்கள். நிச்சயமாக அனைவரிடமும் சமூக ஊடகக் கணக்குகளும் இல்லை அல்லது பயணம் செய்யும் ஒலிபெருக்கியில் கூறப்படுவதைச் செவிமடுக்கச் சிறந்த செவிப்புலனும் இல்லை அல்லது உயர் மட்டத்தில் உள்ள நண்பர்களும் இல்லை. தடுப்பூசிகள் பற்றிய தகவல்கள் பொதுவாக எல்லா இடங்களிலும் வழங்கப்படவில்லை. இவ்வாறான தகவல்கள் சம்பந்தப்பட்ட நபர்களை, குறிப்பாக நகரப் பிரதேசங்களில் உள்ளவர்களைச் சென்றடைந்ததா என்பதும் தெரியாது.

கிடைக்கக்கூடியதாக உள்ள சொற்பமான தடுப்பூசிகளும் எவ்வாறு விநியோகிக்கப்படுகின்றன என்னைத் தீர்மானிப்பதில் பெரிதாக அறிவியல் எதுவும் பயன்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை. சில சந்தர்ப்பங்களில் உழைக்கும் மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. ஏனைய சந்தர்ப்பங்களில் சிரேஷ்ட பிரசைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் முழு மாவட்டங்களுக்கும் தடுப்பூசி பெறுமாறு கூறப்படுகின்றது. ஏனைய சந்தர்ப்பங்களில் இது குறிப்பிட்ட கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு

*The Civil Society Collective for COVID-19 Response is a collective of civil society organisations that have come together to contribute to the national COVID response efforts. The CSO collective primarily focusses on supporting most vulnerable groups affected by the pandemic with emergency food and hygiene materials. It also advocates on issues that affect these vulnerable groups during the pandemic. The CSO collective consists of 25 district representatives and 15 core group members at the national level coordinating the response of participating CSOs throughout the country. For any details you may contact csocollectivesl@gmail.com*

வரையறுக்கப்படுகின்றது. இலங்கை மருத்துவர்கள் சங்கம் மற்றும் சமுதாய மருத்துவர்கள் சங்கம் போன்ற பல்வேறு தொழில்ரீதியான அமைப்புக்கள் தடுப்பூசியேற்றல் எவ்வாறு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது என்பதில் அறிவியல் அடிப்படை இல்லாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளன. வெளிப்படைத்தன்மையற்றதும் அறிவியல் ரீதியில் மேற்கொள்ளப்படாததுமான தடுப்பூசியேற்றல் செயன்முறை தடுப்பூசியேற்றலின் வெற்றியினைப் பாதிக்கின்றது. இது சமத்துவத்திற்கான மக்களின் உரிமையினையும் செயன்முறையில் பொதுமக்கள் வைத்துள்ள நம்பிக்கையினையும் அடியறுக்கின்றது. தடுப்பூசி பெறுவதற்கான உரிமை அனைவருக்கும் உண்டு. தடுப்பூசிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைக்கையில், யார் தடுப்பூசியினைப் பெறுகின்றனர் மற்றும் யார் பெறவில்லை என்பதை அறிவியல் ரீதியிலான தர்க்கமுறையிலான கோட்பாடுகள் தீர்மானிக்கவேண்டும். தனிநபர்கள் ஏன் தடுப்பூசியினைப் பெறுகின்றனர் என்பதற்கான காரணங்களாக அதிகாரம், பணம், செல்வாக்கு, தொடர்புகள், பால்நிலை, இளைஞர், அங்கவீனமின்மை ஆகியவை இருக்கக்கூடாது. இருப்பினும் தடுப்பூசியேற்றலில் சமத்துவமின்மைகள் அபரிமிதமாகக் காணப்படும் செய்திகள் உள்ளன. இலங்கை மக்கள் மொறட்டுவையிலும் நாரஹேன்பிடியவிலும் அப்பட்டமாகப் பரிவு காட்டப்பட்டுச் சிறப்புரிமை வழங்கப்படுவதற்கான உதாரணங்களைக் கண்டனர். ஏனைய மாவட்டங்களில் உள்ளூர் அரசியல்வாதிகளே தடுப்பூசியேற்றல் முன்னுரிமைகளைத் தீர்மானிக்கின்றனர் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். தமது பணிகளில் அரசியல் செல்வாக்குத் தலையிடுவதாக மார்ச் மாதத்திலேயே சுகாதாரத் திணைக்களத்தினைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். அண்மையில், அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்க உறுப்பினர்களின் உறவினர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கான தீர்மானத்தினை பொதுச் சுகாதார அதிகாரிகள் கண்டித்திருந்தனர். எவ்வாறாயினும், களுத்தறை மாவட்டத்தில் மொரகாகேனயில் இடம்பெற்றது போன்று தொழில் வல்லுனர்களுக்குத் தலையீடு இன்றிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டபோது அது ஒழுங்கான முறையிலும் முறைமை வாய்ந்த வகையிலும் நிறைவேற்றப்பட்ட சாதகமான அனுபவத்தினையும் நாம் அவதானித்துள்ளோம். இது ஏனைய இடங்களிலும் பின்பற்றப்படவேண்டும். கடினமான காலங்களில் இலங்கை மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் பெருந்தொற்றை எதிர்கொண்டு அதனை வெல்வதற்காக இந்த அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். ஆனால் தடுப்பூசியேற்றும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வரும் முறையின் காரணமாக அரசாங்கத்தின் மீது பொதுமக்கள் வைத்துள்ள நம்பிக்கை துரிதமாகச் சீர்குலைந்து வருகின்றது.

எனவே, வைரசின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான சகல அவசியமான நடவடிக்கைகளையும் எடுக்குமாறு நாம் அரசாங்கத்தினைக் கோரும் அதேவேளை:

- பொதுமக்களின் சார்பில் போதிய அளவான தடுப்பூசிகள் பெறப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தவேண்டும். மேலும் உறுதிப்படுத்தப்பட்டு வரவிருக்கும் கொள்வனவுச் செயன்முறை ஏற்பாடுகள் பற்றி எப்போதும் பொதுமக்களுக்குக் கிரமமாக அறியத்தரவேண்டும்;
- உலகளாவிய தடுப்பூசி நன்கொடை நிகழ்ச்சித்திட்டம் மூலமாக நன்கொடையாக வழங்கப்படும் தடுப்பூசிகளைப் பெற்று வழங்குவதற்காக அரசாங்கத்தினால் உலக சுகாதார ஸ்தாபனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டத்தினை வெளியிடல்;
- திட்டத்தினை இற்றைப்படுத்தி, சம்பந்தப்பட்ட மருத்துவ மற்றும் பொதுச்சுகாதார நிபுணத்துவத்தின் தலைமைத்துவம் மூலமாகப் பரிபூரணமான தடுப்பூசியேற்றல் உபாயமார்க்கத்தினை உருவாக்கல்;
- மாவட்டங்கள், பிரிவுகள் மற்றும் கிராமங்களை முன்னுரிமைப்படுத்துவதற்கான தெரிவடிப்படை பற்றிய திட்டம் வெளிப்படைத்தன்மைமிக்கது என்பதை உறுதிப்படுத்துதல் மற்றும் பொதுமக்கள் அதுபற்றி அறிந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்தல்;
- விநியோகிப்பதற்குத் தடுப்பூசிகள் போதாதவையாக இருக்கையில் மக்கள் எவ்வாறு முன்னுரிமைப்படுத்தப்படுகின்றனர் என்பதில் அறிவியல் ரீதியான கருத்தொருமிப்பினை உறுதிப்படுத்தல். முன்னுரிமைப்படுத்துகையில் பின்வரும் குழுக்களில் விசேட கவனம் செலுத்துதல்;
    - முன்களச் செயற்பாட்டாளர்கள்
    - முதியவர்கள் மற்றும் வைரஸ் தொற்று ஏற்பட்டால் அது உயர் அபாயநேர்வுடையதாக மாறக்கூடிய வேறு சுகாதார நிலையினை உடையவர்கள்

- தொற்றுக்கு முகங்கொடுக்கும் அபாயநேர்வினைக் கொண்ட ஆனால் வேறு தெரிவில்லாது அதற்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளவர்கள் (உதா: அவசர சேவை வழங்குனர்கள், தொழிற்சாலை ஊழியர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்கள்)

- முதியவர்கள், கர்ப்பிணிகள், அங்கவீனமானோர் ஆகியோரின் அணுகல் தொடர்பான பிரச்சினைகள் கருத்தில் கொள்ளப்பட்டு அவர்களுக்காகத் தடுப்பூசியேற்றும் விசேட திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தல்;
- தடுப்பூசி தொடர்பான தகவல்கள் பொதுமக்களுக்குச் சமமாகக் கிடைக்கின்றது என்பதை உறுதிப்படுத்தப் பூரணமான தொடர்பாடல் உபாயமார்க்கத்தினை உருவாக்கல் மற்றும் தடுப்பூசியேற்றப்படும் இடம் மற்றும் நேரம் பற்றிய பூரணமான தகவல்கள் பொதுமக்களுக்குக் கிடைக்கின்றன என்பதை உறுதிப்படுத்தச் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் தொலைக்காட்சி அலைவரிசைகளையும் செய்திப் பத்திரிகைகளையும் குறுஞ்செய்திச் சேவைகளையும் பயன்படுத்தல்.
- தடுப்பூசியேற்றலின் முக்கியத்துவம் பற்றிப் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தி ஏதாவது தவறான தகவல்கள் அல்லது குறையான தகவல்கள் இருப்பின் அவற்றினை உரிய முறையில் நிவர்த்திசெய்தல்.
- எமது சமூகத்தில் மிகவும் பாதிப்புறுநிலையில் உள்ளவர்களைப் பாதுகாக்கும் அதேவேளை, இலங்கையில் இருந்து கொவிட் 19 இனை இல்லாதொழிப்பதனை முன்னுரிமைப்படுத்தல்.

**எமது பொருளாதாரத்தினை எம்மால் எப்போதும் மீளக் கட்டியெழுப்ப முடியும், ஆனால் நாம் இழப்பவர்கள் மீண்டும் ஒருபோதும் வரமாட்டார்கள்**

மேலதிக தகவல்களுக்கு,

சிவில் சமூகக் கூட்டமைப்பின் சார்பாக தொடர்பு கொள்ள ,

வைத்தியர். வின்யா ஆரியரட்னே - சிவில் சமூகக் கூட்டமைப்பின் இணை இலகுபடுத்துனர்

vinya.ariyaratne@gmail.com

ரோகன எட்டியாராச்சி - சிவில் சமூகக் கூட்டமைப்பின் இணை இலகுபடுத்துனர்

rohana.paffrel@email.com

இனோமா கருணாதிலக - சிவில் சமூகக் கூட்டமைப்பின் பிரதிநிதி

inoma@lstlanka.org

*The Civil Society Collective for COVID-19 Response is a collective of civil society organisations that have come together to contribute to the national COVID response efforts. The CSO collective primarily focusses on supporting most vulnerable groups affected by the pandemic with emergency food and hygiene materials. It also advocates on issues that affect these vulnerable groups during the pandemic. The CSO collective consists of 25 district representatives and 15 core group members at the national level coordinating the response of participating CSOs throughout the country. For any details you may contact csocollectivesl@gmail.com*